இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள். 25.04.2024
O.S. 323/2014
வா.சா.2 முத்தையா என்ற ராஜா
பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதி வர்கீஸ்ன் உடன் பிறந்த சகோதரி சகாயவதியை நான் திருமணம் செய்துள்ளேன் என்றால் ஆம். என்னை இந்த வழக்கிற்கு சாட்சியாக வர சொல்லி வழக்கறிஞரிடம் அழைத்து சென்று நிரூபண வாக்குமூலம் தயார் செய்தது வாதி தான் என்றால் ஆம். குருசடியாள் மற்றும் மைக்கேல் ஆகியோர் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினையின் படி சொத்து என் மாமியார் குருசடியாளுக்கு கிடைத்து என்றால் எனக்கு தெரியாது.

குருசடியாள் அவருக்கு கிடைத்த சொத்தில ஒரு பகுதியை வாதிக்கு கொடுத்தார் என்றால் சரி. கிழக்கு பக்கம் கொடுத்தார். குருசடியாளின் மொத்த சொத்திற்கு கிழக்கு பக்கம் மைக்கேலுக்கு சொத்து ஒதுக்கி இருந்தது என்றால் சரிதான். மைக்கேல் அவர் சொத்தை பிரதிவாதி அருளுக்கு விற்றார் என்றால் சரிதான். வாதிக்கு கிடைத்த சொத்தில் வாதி வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். வாதியின் வீட்டின் கட்டுமானம் எத்தனை சதுர அடி என்று எனக்கு நினைவில்லை.

வாதிக்கு எத்தனை சதுர அடி குருசடியாள் கொடுத்தார் என்றால் 3 1/4 சென்ட் என்று ஞாபகம். குருசடியாளுக்கு கிடைத்த சொத்தில் என்ன என்ன எல்கை குறிப்பிட்டு எழுதி உள்ளது என்று தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. மைக்கேலுக்கு கிடைத்த சொத்தில் என்ன என்ன எல்கை குறிப்பிட்டு எழுதி உள்ளது என்று தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எனக்கு யார் யாருக்கு எவ்வளவு இடம்

இடத்தின் எல்கைகள் போன்ற எந்த விவரமும் தெரியாமல் நான் என் மைத்துனருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதி ஆக்கிரமிக்க முயற்சித்ததாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் நான் எழுதி போடவில்லை.